2002 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

82—

நீதிமன்றங்கள்

***6588—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டத்திற்காக நிலக்கோட்டை வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட மாவட்ட முன்சீப் நீதிமன்றம், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகிய இரண்டு நீதிமன்றங்களையும் சோழவந்தான் நகரில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் நகரில் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. இங்கிருந்து வழக்கிற்காக மதுரை செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, சோழவந்தானில் வருகிற நிதியாண்டில் அமைத்துத் தர, இந்த அரசு—மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு—நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 25 நீதிமன்றங்கள். அதாவது, ஒருங்கிணைந்த மதுரை மாவட்டத்தில் 25 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மதுரைக்கும், சோழவந்தானுக்கும் இடைப்பட்ட தூரம் என்று பார்க்கும்போது, 28 கி.மீ. என்பதால், இதிலே சிரமம் இருக்காது என்கிற கருத்தின் அடிப்படையில், புதிய நீதிமன்றம் அமைப்பதற்கு அவசியம் இல்லை என்பது கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

[2002 ஏப்ரல் 4

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுக்கா மையத்திலும் இந்த நீதிமன்றங்கள் ஏற்படுத்துகின்ற நிலை கொள்கை அளவிலே அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில்—வாடிப்பட்டி என்பது தனி தாலுக்கா. சென்றமுறைகூட, பல முறை அங்கே நீதிமன்றங்கள் வேண்டுமென்று நானும் கோரிக்கை வைத்து இருக்கிறேன்—அந்தப் பகுதிக்கு மிகவும் அவசியம் என்பதாலும், அதுபோல சேடப்பட்டியைப் பிரித்து இப்போது தனியாக தாலுக்கா மையம் ஏற்படுத்தி இருக்கிறார்கள், அந்த தாலுக்காவிற்கும், பேரையூர் தாலுக்காவிற்கும், நீதிமன்றங்கள் அமைப்பதற்கு—ஒவ்வொரு தாலுக்காவிற்கும், ஒவ்வொரு நீதிமன்றம் என்று கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு இருக்கிற அரசு, அதைச் செய்து தருவதற்கு—முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்துருவினை ஆய்வில் நாம் எடுத்துக் கொண்டாலும்கூட, தற்போது உள்ள அரசினுடைய நிதி நெருக்கடி நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு நிச்சயமாகத் தெரியும். இதிலே ஒரு பிரச்சினை என்னவென்றால், one time investment என்று சொன்னால், தாராளமாகச் செய்து விடலாம். ஆனால், ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றால், தொடர் செலவினம் அதிலே இருக்கின்ற காரணத்தினால், அதிலே அரசினுடைய நிதியையும் நாம் கவனத்திலே கொள்ள வேண்டி உள்ளதால்—தொடர் செலவினம் என்று பார்த்தால், ஆண்டுக்கு கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் ஏற்படுகின்ற சூழ்நிலையிலே—தற்போது அதற்கு சாத்தியக்கூறு இல்லை. எப்போதுமே சாத்தியக்கூறு இல்லை என்று நான் சொல்ல மாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டத்தில் உரிமையியல் நீதிமன்றம் இருக்கிறபோது, அதே வட்டத்தில் உள்ள மக்கள் வேறு வட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்குச் சென்று நீதி பெற வேண்டிய நிலைமை சில இடங்களிலே இருக்கின்றது. பொதுமக்கள் நலன் கருதியும், சிக்கன நடவடிக்கையாகவும், ஒரு வட்டத்தில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்கு, குற்றவியல் நடுவர் மன்றங்களுக்குண்டான அதிகாரங்களைக் கொடுத்து, Distict Munsif-*cum*-Magistrate Court என மாற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்தை ஒரு நல்ல கருத்தாகவே நான் கொள்கின்றேன். எனவே, இதிலே ஆண்டாண்டு காலமாக இருக்கின்ற அந்தச் சிக்கல்கள்; அதாவது distance ஒரு சிக்கலாக இருக்கலாம். அதே நேரத்தில், பொதுமக்களுக்கு உள்ள சிரமங்களை நாம் அவ்வப்போது கருத்திலே கொண்டு அந்தந்த இடங்களில் பொதுமக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதையெல்லாம் ஆய்வு செய்து முழுமையான அளவுக்கு எதிர்காலத்திலே பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களுடைய நலன்களைக் காப்பாற்றுகிற வகையில் நிச்சயமாக ஒரு நிலையை அரசு எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் எத்தனை மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கும், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் ஒப்புதல் அளித்து, கட்டடம் கட்ட அரசு உத்தேசித்து உள்ளது? மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Constitution of New Courts—புதிதாக அமைக்கப்படுகின்ற நீதிமன்றங்கள், Construction of New Court Buildings, இந்த இரண்டுமே பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்கள் சங்கத்திலிருந்து நாம் கருத்துகளைப் பெற்று, உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையுடன் வந்தால் அரசு அதைப் பரிசீலித்து, நிதிநிலைக்கேற்ப ஏற்றுக்கொள்ளும். அந்தக் கருத்துரு வரப்பெறவில்லை. வந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, தாலுக்காவினுடைய தலைநகரம். அங்கே

குற்றவியல் நீதிமன்றம் தொடங்குவதற்காக, கடந்த ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் மாவட்டத்தினுடைய தலைமை நீதிபதி பேராவூரணிக்கு வருகை தந்து அதற்குரிய இடங்களையெல்லாம் தேர்வு செய்தார். அதற்குரிய கட்டடத்தைக்கூட நாங்கள் இலவசமாக, வாடகை இல்லாமல் தருவதாகக்கூட ஒத்துக்கொண்டோம். இருந்தாலும், இதுவரை அங்கே நீதிமன்றம் துவங்கவில்லை. இந்த நிதி ஆண்டில் நீதிமன்றம் துவங்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின்படி one time investment என்று சொல்லக்கூடிய அளவிற்கு வேண்டுமானால் அவர் தரலாம். ஆனால் recurring expenditure-க்கு யார் தருவது? எனவே, தொடர் செலவினத்தை நாம் கவனத்திலே கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, நிதிச்சுமையின் காரணமாக அதைத் தற்போது செயல்படுத்த முடியவில்லை. நிதிநிலைமை சீரானபின், அதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று குந்தா தாலுக்கா; மற்றொன்று பந்தலூர் தாலுக்கா. குந்தாவிலிருந்து உதகைக்கு வருவதற்கு 33 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டியிருக்கிறது. அதேமாதிரி, பந்தலூரிலிருந்து கூடலூருக்கு வருவதற்கும் அதிக தூரம் இருக்கிறது. ஆகவே, இரண்டு புதிய தாலுக்காக்களுக்குமாகச் சேர்த்து குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் சிரமம் இருந்தால், அதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்: